544

191

ARYA DHARMAM

TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	
[தபால் சிலவுள்பட]	
ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு	
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்	

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஞு சித்திரை-மீ 13உ 1940ஞு ஏப்ரல்மீ 25உ | ல-17

வாரக்குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோ. சாமா.

ஸாவர்க்கர் நிபந்தனை போதா !! ஹிந்து மஹாஸபை காங்கிரசுடன் ஒத்துழைக்க சில நிபந்தனைகளைக் கூறினர். அத்துடன் கூட எந்த ஒரு சிறிய ஜாதியினரும் தன்னிஷ்டபடி மத விஷயங்களிலும் ஆசாரத்திலும் நடக்க பூர்ண ஸ்வதந்தரம் வேண்டுமென சேர்த்தல் வேண்டும் !! பேரளவில் ஹிந்து இருந்தென்ன ?

பெண் இலாகா தனி ? சென்னையில் பெண் மக்களை முனிசீப்பாகவும் ஜட்ஜாகவும் நியமிக்க கிளர்ச்சி நடக்கிறது, காங்கிரஸ் கமிட்டி இவர்களுக்குகென ஓர் தனி இலாகா நிர்வாஹம் நடத்த தீர்மானித்திருக்கிறது.

சாஸ்திர பாடசாலையில் பெண் !! திருப்பதியில் சிரோமணி வகுப்பில் ஓர் பெண் படிக்கிருள் ! சீக்கிரத்தில் வேத வகுப்பிற்கும் அவர்களை எதிர்பார்க்கலாம் ! இந்த பெண் மாணவரைச் சேர்க்க காங்கிரஸ் மந்திரிகள் மிக பாடுபட்டனர் ஆனல் வேலையில்லா சிரோமணிகளுக்கு வேலை கொடாது B.A., M.A., க்களைப் பண்டிதராக நியமிக்கின்றனர் !! அந்தோ !!

தனி ராஜ்ய கூத்து !! முஸ்லீம் ராஜ்யத்தைப் பிறித்தளிக்க அநுகூலமான அபிப்ராயம் திரட்ட ஜின்ஞ 19உ முஸ்லீம்களை கூட்டம் போட உத்திரவிட்டார். ஸபைகள் கூடினவே தவிற போதிய உத்ஸாஹமில்லை !! ஆனல் அவர் பெயர் சீமை எல்லாம் அடிபடுகிறது !

ஹுப்ளியில் ஓர் பித்தன் !! மதுகேசவராலயத்தில் சண்டாளனை விட்டால் தான் சாப்பிடுவேனெனபட்டினி இருந்து முடிவில் ராஜி செய்வதாக கூறி நிறுத்தினர். இந்த பித்து எப்பொழுது துலையும்?

ஜைனர் கொடுத்த 1 லக்ஷம் 10 ஆயிரம் !! தன் மத ஆராய்ச்சி செய்தால் திருப்பதி கலாசாலைக்கு ஷை தொகை கொடுப்பதாக ஒருவர் கூறுகிருர் ? நம் மதத்திலோ?

சரியான பட்டம் !! சென்னை ஸம்ஸ்கிருத ஸபை சியாழி வக்கீல் ஸ்ரீ சுந்தராசார்யருக்கு "ஸாஹிதீவல்லப" என்ற பட்டத்துடன் 1008 ரூபாயுமளித்தது ! வக்கீல் பாக்யவானே.

வேலூரில் 144 சேக்ஷன் !! ஊர்சிறியதாயினும் கக்ஷிகள் பெருத்த ஊர் அது ! ஆதலின் எந்த ஊர்வலமும் கூடாதென உத்திரவு போடப்பட்டது. சாந்தி, பேச்சிலே தான் !

சேலம் விழித்தெழுந்ததா? ஸ்ரீ சங்கராசார்ய படம் மிகவும் சட்டப்படி கூட குற்ற முள்ளதென ஓர் பிராமண ஸபை கூடி கண்டித்தது. இதே போல் பற்பலவிடங்களிலும் இதைவிட இன்னும் மோசமான படக்காக்ஷிகளையும் இதையும் கண்டித்துக் கிளர்ச்சி செய்தால் அதிகாரிகள் கண் விழித்துப்பார்ப்பர். செய்த வரை சேலத்திற்கு நன்றி. நாட்டு நாராயணராவின் முயற்சி போற்றத்தக்கது.

அகரமாங்குடி ராஜாங்க கைலாஸ வேத பாடசாலை.

இதன் ஆராவது அப்தபூர்த்தி கொண்டாட்டங்கள் நாளது விக்ரம-ஞு சித்திரை மீ 8-உ சனிகிழமை மாலை 5-மணிக்கு ஷை பாடசாலை "வேதவிலாஸ்", கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. உள்ளூர் மகாஜனங்களை தவிற மிலட்டூரிலிருந்தும் ஆஸ்திக மகாஜனங்களும் விஜயம் செய்திருந்தனர். அக்ராஸனதிபதியான திருவாதி ராஜா காலேஜ் பிரின்ஸிபால் வித்யாரத்னம் டி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் எம். ஏ. பி. எச். டி. அத்யக்ஷர்களால் வரவேற்கப்பட்டு அக்கிராஸனத்திலமர்ந்ததும் மாணவர்களாலும் ஷை பாடசாலை ஆசார்யாள் ஸ்ரீ நல்லிச்சேரி ராமசந்திர கனபாடிகளாலும் கடவுள் வணக்கம் செய்யபட்டது பிறகு டிரஸ்டி எம். திருமலை அய்யரால் அகரமாங்குடி கிராமத்தின் சிறப்பும் அதிலுதித்த பரமசாம்பவாளுக்கு அக்ரேஸரும் திருவையாறு ஸ்ரீபஞ்சனதீசுவரதர்மாம்பிகா, கணேசஸகந்தசண்டேசுவரர்களான பஞ்சமூர்த்திகளுக்கும் வெள்ளி வாகனங்கள் செய்து வைத்த ஸ்ரீ ராஜாங்க அண்ணவையரவரகளின் பிரபௌத்ரரான தர்மகத்

The Kumbakonam Mutual Benefit Fund Limited, Kumbakonam.

NOTICE.

Mr. S. Venkataraman, B.A., G.D.A.R.A., has also been nominated for the place of Auditor for the year 1939—40 to be appointed at the Annual General Meeting of the Fund on 5—5—1940.

Kumbakonam, 23—4—'40.

V. R. Satakopa Iyengar. Secretary.

தா ராஜாங்ககைலாஸய்யரின் தர்ம சிந்தனையம் பற்றியும், அக்ராஸனதிபதிக்கு டப்சரிப்பும், பாடசாலையின் வரலாரும் வெகு அழகாகவும் சுருக்கமாகவும் எடுத்து உறைக்கப்பட்டது. பிறகு மாணவர்களின் வேதபாராயணச் செலவு காட்டும் பாடசாலையின் வருஷாந்திரவரவு செலவு கணக்குரிபோர்ட்டு படிக்கப்பட்டது பிறகு அக்ராஸனதிபதி யவர்கள் நான்கு வேதங்களையும் தனிதனியாக பிரித்து அவைகளின் பிரயோஜனங்களையும் வெகு விரிவாக எடுத்து சொல்லியும் வேத மந்திரங்களை மட்டும் அத்யயனம் செய்வதோடு அவைகளின் பத அர்த்தங்களை தெரிந்து கொண்டு அத்யயனம் செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் தகுந்த பிரமாணங்கள் உதாஹரணங்களுடன் ஸபையிலுள்ளவர்கள் ச்ரோத்ரானந்தமடைந்து பரவசமாகும்படி உபன்யஸித்தார்கள்.

முடிவில் மிலட்டூர் சிவப்ரியாஸம்ஸ்கிருதஸ்கூல் ஹெட்பண்டிதர் ஸ்ரீ சுந்தரேசசாஸ்திரிகள் அக்ராஸனரின் உபன்யாஸத்தை பற்றி கொண்டாடி பேசினர். பிறகு ஸ்ரீ திருமலைஅய்யரால் அக்ராஸனதிபதிக்கும் வந்திருந்தவர்களுக்கும் வந்தனமளிக்கப்பட்டு பழம், சந்தனம், தாம்பூலம் வினியோகங்களுடன் உத்ஸவம் முடிவுக்கு வந்தது. (ஓ. நி.)

ஒரு தர்மசாஸ்திர ஸந்தேகம்

ஸ்வீகிருதமாய் போனவனும் அவனுடைய ஜநகபிராதாவும் சேர்ந்து ஒரே கிருஹத்தில் ஒருவனே பண்ணுவதான பிதுரு கர்மாவில் சேர்ந்து விருதாளாக ஆகலாமா என்ற விவரத்தை ஆரியதர்ம மூலமாகவே தெரிவிக்கவேணுமாய் தர்மசாஸ்திரஞர்களான வித்வான்களை மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்

எஸ். சங்கர சாஸ்திரிகள்

ஆசாரம்

விவாகம்.

(வைத்தீஸ்வரய்யர் கல்கத்தா)

விவாகம் செய்துகொள்ளாதவனுக்கு பிறர் துக்கம் சாதாரணமாய் தெரிவதில்லை. விவாகமானவன் மனைவி மக்களென்று தன் அன்பைப் பகிர்ந்து கொடுக்கிறான். தன் சுகத்தை பாராட்டுவதில்லை. இது வளர்ந்து உலகத்தாரெல்லாரிடமும் அன்பு வைக்கிறான். ஆகவே இல்லறத்திலிருப்பது அவசியமாகிறது. விவாகமாகிறவரையில் தனது வீரியத்தை வீணாக்காதிருப்பவன்தான் சுத்தமுள்ளவன். அவனே விவாக யோக்யதையுள்ளவன். வீரியம் வீணாவதால் சிசுஹத்தி ஏற்படுகிறது. யோக்யதையுள்ளவன் யோக்யதையுள்ள பெண்ணையே மணக்கவேண்டும். ருது ஆகாத தன் குலத்திற்கு ஏற்றவள் சுத்தமானவள். வேறுகுலத்தில் மணப்பது காளையையும் எருமைக்கிடா வையுமோ நரியையும் நாயையுமோ ஒருவண்டியில் பிணைத்தது போலாகும். மனமும் காமமும் தூண்டுகிறபடி செய்வதானால் தாய் தங்கை பெண் என்ற வியவஸ்தைகளுக்கு இடமில்லை. விவாக ரத்தைத் தேடுகிறவர்கள் காமுகர்கள். அமெரிக்காவில் விவாக ரத்து செய்கொண்டு 4-5 தடவை புனர்விவாகம் செய்துகொண்டவர்களுடைய வா வை விசாரித்தால் முதல் கணவனோடேயே பெரும்பாலோர் கடைசியில் சேர்ந்திருக்கிறார்களென்று தெரிகிறது. இதனால் சிறுவயதில் ஏற்பட்ட ஒற்றுமையே மேலானதென்று அறியலாம். இதற்காக வேருதுவாத சிறு பிராயத்தில் பழக்கவேண்டிய, தவசியமாகிறது. மிருகங்களைப் பழக்குவதிலும் கல்வியிலும் இளமை அவசியம் இதனால் விதவைகள் அதிகமாகிறார்களென்பது மதியீனம். விவாகமாகாதிருப்பதும் அவர்கள் கருத்தரித்து அழிப்பதும் மேல்நாட்டில் ஸகஜமாயிருக்கிறது. நமது நாட்டிலும் ஸுஜாதா ஸர்க்கார் என்னும் இளம் பெண் கல்கத்தாவில் இறக்கலாயிற்று. இதேயுத்தத்தில் ஏராளமான விதவைகளுண்டாவதற்கு என்ன பரிகாரம். மேல்நாட்டில் சுத்தமில்லாததால் ஸ்திரீ பிரஜைகளும் பெற்றோரை அறியாத மக்களும் மிகவும் அதிகம். இதற்கு என்ன பரிகாரம். யுத்தம் பூகம்பம், புயல், தொத்துவியாதி இவைகளை (Acts of Providence) ஈச்வரயத்னம் 'என்கிறார்கள். இது விதவைகளுக்கு ஏன் பொருந்தாது? அனுபவமுள்ள பெரியோர்களே ஏற்ற வதுவரர்களைத்தேடி மணஞ்செய்து வைக்கவேண்டும். சிறுவர்கள் அனுபவமில்லாததாலும் காமநுகர்ச்சியாலும் தவறுதல் செய்யக்கூடும். தற்காலம் பொருளாசையால் சம்பந்தம் செய்வது வருந்தத்தக்கது “ (Aappiness does not come; it is made) சுகம்என்பது வருகிற வஸ்துவில்லை செய்துகொள்வது என்று பிரபல அமரிக்கா ஸ்திரீ நடிகர் சொன்னார். வியாபாரி தன்னிடம் வாங்குகிறவர்களை அனுசரிப்பது போலவும், வேலைக்காரன் யஜமானனை அனுசரிப்பது போலவும் ஸ்திரீகளும் புருஷனை அனுசரித்தால்தான் சுகம். அனுசரிக்காதவர்கள் நஷ்டமடைவதும் வேலையில்லாதிருப்பதும் போல ஸ்திரீகளும் துக்கமடைவார்கள். ஓரேவிவாகம் ஆயுள் வரையிலிருக்கவேண்டு மென்பதற்கு சுத்தமே முக்யகாரணம் விதையும் நிலமும் சுத்தமாயிருந்தால் பயிர் நன்றாய் விளைவது போல் மக்கள் நல்லவர்களாயிருப்பார்கள் இந்தியாவில் அனாசாரமாகிய பாபத்தால் ஸ்திரீ பிரஜைகளும் அல்பாயுளும் அதிகமேயன்றி வேறில்லை. பீஜமும் க்ஷேத்திரமும் சுத்தமாயிருந்து புணர்ச்சியும் நியமப்படி இருந்தால் புருஷப்ரஜைகளே அதிகமாயிருக்கும். ஆயுளும் பூர்ணமாயிருக்கும். 50—60 வருஷங்களுக்கு முன் பெண்கிடைப்பது அரிதாயிருந்து பெண்வீட்டாருக்கு தக்ஷிணைகொடுத்து நாடறிந்தது நமது சாஸ்திரத்திலும் பணங்கொடுத்து பெண்ணை வாங்குதல்லாது வரனுக்கு தக்ஷிணை சொல்லவில்லை. அதாவது இந்தியாவில் பெண்கள் அதிக மாயிருந்ததேயில்லை. ஒருவன் தன்மனைவியைத் தவிர மற்ற ஸ்திரீகளைத் தாய்போல் கருதவேண்டும். தன் மனைவியிடமும் நியமந்தவறி ரமிக்கக்கூடாது. பஹிஷ்டாகாலம் மூன்று நாளும் அனவசியமாய் அவளைப் பார்ப்பது பேசுவது கூடாது, நாலாவது நாள் தொடக்கூடாது. பிறகு 12-நாள் வரையில் பர்வகால மல்லாத நாள்களில் கூடலாம். பகலில் புணரக்கூடாது. ஆனால் வெகுகாலம் பிரிந்திருந்த தம்பதிகள் சேர்ந்த சமயம் பகலாயிருந்தால் அந்த ஒரு பகலில் தோஷமில்லை. எந்த ஸ்திரீயையும் ஆடையில்லாதிருக்கும் பொழுதும் ஸ்நான அலங்காரங்கள் செய்துகொள்ளும் பொழுதும் பார்க்கக்கூடாது மாதவிடாய் நின்றுபோன ஸ்திரீகளோடும் விதவைகளோடும் தன்னைவிட அதிக வயதானவளோடும் கலவி கூடாது. இந்த நியமங்களால் ஆத்மசக்தி அதிகரிக்கும்-பிரஜாவிருத்தியும் அவர்களைநல்வழிப்படுத்துவதுமே மனிதர்களின் முக்யமான கடமையாயிருப்பதால் தேகம், ஆகாரம், தொழில், நிஜக்ஷேத்திரங்கள், மனம், இவைகளின் சுத்தம் அத்யாவசியமாயிருக்கிறது. இந்தக்கடமையாலேயே பிரம்மசர்யமும் இந்திரிய நிக்ரஹமும் அத்யாவசியமாகின்றன.

சீர்கட்டுக்குத்தான் திருத்தம் வேண்டும். சீருக்குத் திருத்தவேண்டாம். சீர்திருத்தக்காரர் என்பது பொருந்தாமல் கெடுதலைக் குறிக்கிறது. சாரதா சட்டங்களும் மேயோ மேதையும் ஒருவகையிலும் பயன்படாது. கத்திரிக்காய்க்கு எருவிடுவதுபோல கெடுதல்தான் விளையும். மேல்நாட்டார் நாகரீகம் சிறிதுகாலமாகவாதலால் அவர்களுக்குப் புராதானமான ஹிந்துக்களைச் சிறுமைப்படுத்துவதில் தான் நோக்கம்.

இதுவரையில் தேகத்தைப்பற்றிய புறச்சுத்தம் சொல்லப்பட்டது. இனி அகச்சுத்தமெனும் மனிதனுடைய சுத்தம் சொல்லப்படும்.

(தொடரும்)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்ப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

தேவாலயங்களின் நிலைமை.

தென்னிந்தியாவில் பல கோயில்கள் உள்ளன. எக்கோயிகளில் பார்த்தாலும் சில்லரைச் சண்டைகள் நிறம்பி இருக்கின்றன. இதன் மூலமாக வியாஜ்ஜியங்கள் கோர்ட்டுகளில் வந்து குவிகின்றன. சாதாரண அந்தஸ்து உள்ளவர்கள் ஏழ்மையால் பீடிக்கப் படுகின்றனர். சில சமயங்களில் அடிதடி முதலிய தீயச்செயல்களிலும் முடிகின்றன. மதத்தை ஸ்தாபிக்கும் நமது ஆலயங்கள் சண்டைகளை ஸ்தாபிக்கவும் யந்திரங்களாக மாற்றப்பட்டு விட்டன. இதற்குக் காரணம் கோயில் அதிகாரிகள் சிப்பந்திகளை அடியாக பாவிப்பதும், அச்சிப்பந்திகளை அடிமை வாழ்வுக்குப் பயந்து வியாஜ்யஜிங்கள் தொடருவதும் அந்த வியாஜ்ஜியங்களில் வாழ்வு நாளை கழிப்பதுமாகவும் நடந்து வருகின்றது. இவ்விஷயமாக நாம் நம்பியிருந்த ஹி. ம. தே. போர்ட்டும் மிக்க ஏமாற்றத்தை அளித்தது. இது விஷயமாக ஏமாற்றத்தை அளித்ததும் அல்லாமல் மேற் கூறிய போர்டு வியாஜ்ஜிய விஷயமாக அதிகமாக செலவு செய்யவும் முன்னிற்கின்றது. செலவு இல்லாமல் சண்டைகளை தீர்த்து வைக்க இது முயற்சித்ததாகச் தெரியவில்லை.

நேற்றுவரைபள்ளியிலும் கலாசாலையிலும் படித்த ஒருவரைக் கோயில் அதிகாரியாக நியமிக்கினறனர். அப்படி நியமிக்கப்படுகின்றவர்கள் கோயில், அல்லது மதவிஷயமாக ஒன்றும் அறியாதவர்களாயிருக்கின்றனர். அப்படித் தெரிந்தவர்களும் குறைவே. அதிகாரிகள் தங்களுக்குள்ள அதிகாரவெறியால் சிப்பந்திகளை பெரும்பாலும் அகாரணமாக வேலையினின்று தள்ளுவதும் (Suspend) முதலிய செய்வதும், கோயில்களே நமக்குக் கதி மோக்ஷம், ஆண்டவன் விட்டதே சிறந்தவழி என்று நம்பி இருங்கும் அச்சிப்பந்திகள் உத்திரவுக்கு பணியாதிருப்பதும் இதனால் ஒற்றுமை குலைவும் மனக்கொதிப்பும் ஏற்படுவதும் சகஜமாயிருக்கின்றன சாதாரணமாக அதிகாரிகளை அவர்களுக்கு மேல் இருக்கும் மேலதிகாரிகளின் உத்திரவு எவ்வளவு கீழ்படியச் செய்கின்றனவோ அதுபோல் தெய்வங்களோ அல்லது கோயிலுக்கான சட்டபுஸ்தகங்களோ அல்லதுகோயில்களில் உள்ள இவ்வொற்றுமை குலைவுகளெல்லாம் நமது விரோதிகளுக்கு சாதகங்களாக ஆகிவிடுகின்றன. ஆகையால் சனாதனிகள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஹி. ம. தே. போர்டு அதிகாரிகளை மதம் அறிந்தவரையும், கோவில் பழக்கவழக்கங்களில் தேர்ந்த ஒருவரை கோயில் அதிகாரியாக நியமிக்கச் செய்து கோவிலில் ஒற்றுமை உண்டு பண்ண வேண்டியது முதல் கடமையாகும். இக்காரியங்கள் நமது லக்ஷியங்களை பூர்த்தி செய்வதற்கு உபயோகமாகும்.

அர்ச்சகர்களின் கடமை

அரசியல் விஷயமாக அர்சகர்கள் எந்த கக்ஷியை சோர்ந்தவர்களாயிருந்தாலும். மதத்தின் விஷயமாகவும், நம்முடைய பூஜா விதிகளையும் ஆராய்ந்து பார்க்கும் கால் நாம் முக்யமாக கொள்ள வேண்டியது அகில இந்தியவர்ணாசிரம ஸ்வாராஜ்ய சங்கமே

மற்ற ஹிந்துமஹாசபையோ காங்கிரஸோ அல்ல. எந்தஜாதிபிரிவு நமது சாஸ்திரங்களுக்கு அவசியமோ அதை அடியோடு அழிக்ககூடியதாக இருக்கிறது. நமது

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)

மக்கள் கடமை

நாகரீகம்

(முன் தொடர்ச்சி)

புத்திப் பயிற்சிகளே கல்வியின் நோக்கமாகும். ஒழுக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி இல்லையென்று சொல்வதற்கு முன் சித்தூர் கிருஷ்ணய்யர் அவர்கள் நமக்கு முன் தோன்றி தடை செய்கிறார். மற்ற கலாசாலைகளில் படித்து தேர்ச்சி பெற்றவர்கள் இந்து மதத்தைப்பற்றி கொஞ்சமும் அறிந்தவர்கள் இல்லை. ஆகமப் பாடசாலை தேவாரப் பாடசாலைகளிலும், புத்திப் பயிற்சிகளில் ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்தை ஒழுக்கப்பயிற்ச்சியில் காணப்படுவதில்லை. வேத காவ்யங்களை சொல்லி வைக்கும் வித்தியா சாலைகளில் ஸமிதாதானம் முதலிய விஷயத்தை பாடப் புத்தகமாக அமைத்தாலும் மாணவர்கள் கஷ்டப்பட்டு கற்கத் தகுந்தவர்கள். இவ்விதமுள்ள மாணவர்களுக்கு நமது மதாசாரங்களில் எவ்விதம் பற்றுண்டாகக்கூடும். கலாசாலை அமைப்புகளும் ஆசார அனுஷ்டானத்திற்கு அவகாசம் தருவதில்லை. செட்டிப் பிள்ளைகளின் பாடசாலைகளில் ஆசார அனுஷ்டான அக்ஷர ஞானங்களில் தேர்ச்சி பெறாதவர்களே மானேஜர்களாக நியமிக்க வேண்டியவர்கள். இவர்களே ஆசிரியர்களுக்கும் யோக்கிய மகாப்பத்திரம் வழங்கவேண்டியவர்கள். இந்நிலையில் வாத்திய சாலைகள் இருப்பதால் மாணவர்கள் முந்திய கலாசாலை மாணவர்கள் போல் நம்மத நாகரீகத்தில் துவேஷம் கொள்கின்றனர். இவர்கள் பால் குற்றமில்லை. புதிதாகச் செதுக்கப்பட்ட பசுமரம் போன்ற பாலர்கள் மனத்தில் சரியான வர்ணம் பூசப்படாததே இதன் காரணமாகும். முதலில் பூசின வர்ணத்திற்கு மேல் எவ்வளவு வர்ணங்களைப் பிறகு பூசினாலும் மரத்தில் பிடிக்காமல் உதிர்ந்து விடுகின்றன. மரத்தை செதுக்காமல் முதலில் பூசிய வர்ணமும் விடுவது இல்லை. ஆகையால் மாணவர்களின் மனதில் முதலில் உண்டான வாசனையே நிலைபெற்று விடுகிறது. இவ்விதம் மத அறிவு உண்டாகாதலால் உலகில் உள்ள துன்பங்களோ சொல் அளவிற்கு நிற்காமல் நாளுக்கு நாள் விருத்தியாகின்றன. சாதாரணப் புத்தகங்களையும் தைவமெனக் கொண்டாடிவரும் நமது நாட்டில் மதச் சட்டத்தின் தலையான மநுஸ்மிருதியும் கூட தீயிட்டு பொசுக்கப்பட்டு வந்ததை பலவிடங்களிலும் நம்மக்கள் பார்த்து வாளாவிருந்தனர். இது போல் மற்றும் பல காரியங்களை எடுத்து எழுத மனமில்லை. அந்தோ! மதக் கல்வியின் சீர்கேடு? பால் மணம் மாறாத குழந்தைகளுக்கு பனையேட்டுப் புத்தகங்களைக் கொண்டு பழக்க வைப்பதே நமது நாகரீகம் என்பது போய் "நான் படிக்க ஆரம்பித்தபொழுது பனை ஏட்டில் மசியால் எழுதப்பட்டதைக் கொண்டு படித்தேன். அதிகாலையில் பள்ளி சென்று படிப்பதுண்டு" என்பனவைகளை நம் குழந்தைகளுக்கு கதை சொல்லுகிறோம். இந்நிலையில் நம் தேசத்தில் ஆசார அனுஷ்டானங்களுக்கு ஆதரவு இல்லையென்று எவ்விதம் வருத்தப்படக்கூடும். விளக்கணைந்ததை நினையாமல் இருட்டில் தவிக்கிறோமென்று தான் இதுவரை நாம் கூச்சலிட்டு வருகிறோம். மதக் கல்வியாவது ஒருவாறு கற்பிக்கப் பட்டு வந்தால் அதுவே தேச விசுவாஸத்திற்கு தண்ணீர் விட்டது போலாகும். மத சம்பந்தமன்னியில் தேச விசுவாஸத்தை உண்டு பண்ணினால் பிற தேச நாகரீகத்தில் மக்கள் சிக்குவார்கள். மத சம்பந்தம் வேண்டாத முறையில் ஹிந்தி பால பாடங்கள் வெளியாகின்றன என்று சநாதனிகள் நடுங்குகிறார்கள். படிக்க இயலாமல் தாய் பாஷைக் கேது விடும் என்று வேறு சிலர் பயப்படுகிறார்கள். சமஸ்கிருத சம்பந்தம் வாய்ந்ததென்று மகமதியர்கள் மறுக்கிறார்கள். ஆனால் ஹிந்தியில் நினைக்க வேண்டியது வேறேயாகும். ஓர் இனம் கெடுக்கப் பட்டால் தன் இனமான பிரதிநிதியில் தான் கெடவேண்டும். காபியின் வியாபாரம் டீ முதலிய குடிக்கும் பொருளால் தான் நடைபெறும் புதிய தவறு சிற்றுண்டிகளால் தடை செய்ய முடியாது. பிரதிநிதிப் பொருள்களில் மக்கள் சௌகர்யத்தை கண்டு செல்வதுண்டு. இலக்கணத்தாலும், மதத்தாலும் வீரியம் அடைந்த வடமொழியை கற்பவர்களும் இலக்கணசம்பந்தம் முதலியன குறைந்த ஹிந்தியில் பிரவேசித்து இப்பொழுதுள்ள வடமொழியும் குறையும், மதநாகரீகத்தைப் பின்பற்றிய சம்ஸ்கிருதம் குறைந்தால் ஹிந்து மதம் சரித்திர விஷயமாய்த் தான் நிற்க வேண்டும் மற்றும் ஹிந்தியில் பாடப்புத்தகங் கூட புதிய முறையில் அமைக்கப்படுவதாய்த் தெரிகிறது. இதன் நோக்கம் மகமதிய சரணாகதியை விளக்கிறது. உருது எழுத்தையும் பின் பற்றி ஹிந்தியிலிருந்து ஹிந்துஸ்தானியை உணர்வதுடன் கூடிநிற்கிறது. ஆனால் ராமாயணமுதலிய தேசமதக் கல்வியை இதில் காணலாம். மதம் மட்டும் மகமதிய மதம் தான்" பீகம் ஸீதா" என்பது முதலியன காணப்படலாகும். ராஜமோரத்தியை பீகம் என்று மகம்மதியர்கள் சொல்லுவார்கள். ஸீதைக்கு இந்த அடைமொழிகளையும் ஏன்! ராமாயணத்தையே மகம்மதிய சரித்திரமாய் குழந்தைகளை நினைக்கச் செய்யும் மகமதியர்களை இந்தியை எதிர்க்காதிருக்கச் செய்யத் தகுந்த வழிதான். ஆனால் ஸ்வராஜ்யம் இந்து மக்களைக் கொண்ட இந்தியாவிற்கு என்பதும் கொஞ்சம் ஞாபகம் இருக்கலாம் இச்சமயத்தில் குழந்தைகளை படிக்கவைக்கும் சமயத்திலிருந்து இரண்டொரு வருஷமாவது ஸம்ஸ்கிருத பாஷையில் மதக் கல்வியில் இடுபடச்செய்யாவிட்டால் ஹிந்துமத நாகரீகம் தேசத்தில் பாக்கி நிற்குமென்று நியாயம் உள்ள எம்மனிதனும் கூறமுடியாது.

தேகப்பயிற்சி விஷயத்தில் முதல் வகுப்பு கலாசாலைகள் ஒருவாறு சிரத்தை காட்டிய பொழுதிலும் இரண்டாவது வகுப்புக் கலாசாலைகள் விஷயத்தை அறிந்து கொள்ள இன்னும் சிலகாலமாகும் போல் தோன்றுகிறது.

புத்திப்பயிற்சியின் விஷயத்தில் தான் இப்பொழுது உள்ள பாடபுத்தகங்கள் அமைக்கப்படுகின்றன. வேதகாவியங்கள் முன்புள்ளபழக்கத்துடனேயேஉலகை மனதில் நினைக்காமல் போதிக்கப்படுகின்றன. வேதம் கற்கும் மாணவர்களும் காவியம் கற்பவர்களும் கல்வியில் கொஞ்சம் கூட பரஸ்பர சம்பந்தம் செய்து கொள்வதில்லை. இதனால் ஒருவருக்கொருவர் பின்காலத்தில் துவேஷங்கொண்டு என்ன சாஸ்திரங்கற்றாலும் ஸ்வரத்துடன் காயத்ரியையாவது ஜபிக்கவல்லவனா? வேதபாரம் தாங்கும் தூண் அல்லவா! என்று சொல்ல ஆரம்பிக்கிறார்கள். ஆனால் நஷ்டம் மட்டும் எல்லாக்காரியங்களாலும் இந்து நாகரீகத்திற்குத்தான். காவியபாடங்கள் கற்கும் மாணவர்களுக்கும் ரஸபாவங்களை முக்யமாய்க் கொண்ட புத்தகங்களே கற்பிக்கவேண்டி இருக்கின்றன. இப்புத்தகங்கள் வருங்காலத்தில் மாணவர்களே குடித்தன வாழ்க்கையிலும், உலகக்கூட்டுலவிலும், ஆசார அநுஷ்டானங்களிலும் சம்பந்த மில்லாமல் நடத்திக்கொண்டு போகின்றன.

திருக்கோடிக்காவல்

உபன்யாஸம்

திருக்கோடிக்காவல் திருகோடிச்வரர் சிவன்கோவில் திருபுரஸுந்தரி அம்மன் ஸந்நிதியில் விக்கிரம-ஸு சித்திரை-மீ 1-ம் தேதி (13—4—40) ஸ்திரவாரம் மாலை 6½ மணி சுமாருக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமச் சங்கர பகவத்பாதாள் ஆஞ்ஞை பிரகாரம் ஷையூர் முத்திராதிகாரி ஸ்ரீ எஸ். அனந்தநாராயண சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் உபன்யாசமும் ஆசார்யாள் அவர்களால் அனுப்பப்பட்ட ஆக்ஞை பத்திரிகையை முத்திராதிகாரி ஷை சாஸ்திரிகளால் நன்கு பிரகடனமும் செய்யப்பட்டது.

ஷையூர் பிர்மஸ்ரீ ராமு சாஸ்திரிகள் அவர்கள் ஆதி சங்கராசார்யாள் அவதாரம் முதலானதையும் ஸ்வதர்மா அனுஷ்டானம் என்பவைப் பற்றியும் ஆஸ்திகர் அனைவர்களும் பேரானந்தம் உண்டாகும்படி விஸ்தாரமாக உபன்யாஸித்தார்.

பிர்ம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்களால் வந்தனோபசாரம் கூறி உபன்யாஸம் முடிவு பெற்றது. ஷை கிராம மஹாஜனங்கள் அனைவரும் விஜயம் செய்திருந்தார்கள். (ஒ. நி.)

அர்ச்சகர்களின் கடமை.

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

சாஸ்திரங்கள் (ஆகமங்கள்) எப்படி ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கிறன்றவோ அது போல் மற்றவைகள் அல்ல. கோயிலுக்கான சட்டபுஸ்தகங்கள் நம் கையில் தான் இருக்கின்றன. ஆகையால் தீண்டாதார் ஆலயப் பிரவேச விஷயமாக நாமனைவரும் ஒன்று சேர்ந்து எதிக்கவேண்டியது அவசியமாகும், எதிரளிகள் அர்சகர்கள் எந்த ஆலயத்தினாலாவது ஆலயப்பிரவேசத்திற்கு சாதகம் என்று ஜாடை காட்டினாலும் தங்கள் பத்திரிகைகளிலும் பொதுக்கூட்டங்களிலும் பறைசாற்றுகிறார்கள். இன்று மதுரையில் வைளியூரிலிருந்து அர்சகர்கள் வராமல் இருந்தால் கூடியசீக்கிரத்தில் சனாதனிகளுடைய இயக்கம் ஜயித்திருக்கும். நமது ஜன்ம ஈசுவரனின் பூஜைகளுக்காக ஏற்பட்டது. சாஸ்திரங்களுக்கு உண்மையை நிலைமை என்ன என்பதை நினைத்த அனைவரும் சாஸ்திரங்களின்படி நடந்தால் நமது லக்ஷியம கைகூடும்.

நமது (அர்சக) கான்பரன்ஸ் கூட்ட வேண்டிய அவசியத்தை வந்தாலும் கூட்ட வேண்டியது, அர்சகர்களாகிய நமது கடமை.

A. V. சௌரி ராஜன்.

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கும், டாக்டர் கோஷியே.
பற்பொடிகளில் சிறந்த கிருஸ்லீட் பற்பொடி ஒன்றே.
கிருஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வே ஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஞு சித்திரை-மீ 13உ

தேவஸ்தான நிர்வாஹம்.

சென்னை மதஸ்தாபன போர்டில் ஏற்கனவே ஸ்தானம் வஹித்துவந்தவர்கள் விலகிப்போய் புதிய மெம்பர்கள் மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். போர்டின் தலைவராக நியமனமாகியிருக்கும் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி பிள்ளை அவர்கள் ஆஸ்திகரும், தெய்வபக்தியுள்ளவரென்றும் சொல்லப்படுகிறது. இவருடைய நிர்வாஹ காலத்திலாவது தேவஸ்தானங்களின் நிலைமையானது, வைதிக லௌகிக அம்சங்களில் நன்கு சீர்திருத்தமடையுமென்று நம்புவோம். தேவஸ்தானமென்பது முற்றிலும் மதஸம்பந்தமான ஸ்தாபனமாகும். அதை நிர்வஹித்துவருகிறவர்கள் முற்றிலும ஆகமாதி சாஸ்திரங்களிலும் வேத, வைதிக முறைகளிலும் நம்பிக்கையுள்ளவர்களாயிருககவேண்டு மென்பதைப் பலதடவை நாம் தக்க நியாயத்துடன் எடுத்துக்காட்டியிருக்கிறோம். இப்போது செய்யப்பட்டுள்ள நியமனம் ஸம்பந்தப்பட்டவரையில் மேற்கண்ட கொள்கை எவ்வளவுதூரம் அநுஸரிக்கப்பட்டிருக்கிறதென்பது சிலகாலம் கழித்து தான் தெரியக்கூடும். மேலும் தேவஸ்தான நிர்வாஹிகளாயிருப்பவர்கள் அவ்வப்போது ஏற்படும் கக்ஷி கவர்ன்மெண்டுகளின் போக்கை அநுஸரித்து தேவாலயத்தை லௌகிக ரீதியில் சீர்திருத்தமுற்படும் அபாயமும் இனி எப்படியிருக்குமென்பது பிற்காலத்தில்தான் தெரியக்கூடும்.

புண்ய பூமியாகிய இப் பாரத தேசத்திற்கு ஏற்பட்ட சிறப்பு தேவாலயங்களால் தான். பிரஜைகளின் இஹபர க்ஷேமங்கள்யாவும் தேவாலயங்களுடன் பிரிக்க முடியாமல் இணைக்கப்பட்டிருக்கின்றன. பத்துப்பேர் சேர்ந்து வஸிக்குமிடங்களில், ஸுகாதார வஸதிகள், நதீ தடாகாதி ஜல வஸதிகள் போன்றவை எப்படி இன்றியமையாத ஸாதனங்களோ, அதுபோல் அவ்விடங்களில் ஒரு தேவாலயமிருக்க வேண்டியதும் அவச்யமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியே தான் எங்குமிருந்து வருகிறது. "கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற மூதுமொழியும் இந்த தத்வத்தையே போதிப்பதாயிருக்கிறது.

தேவாலயங்களில் நடக்கும் எந்த பூஜையும் பிராணி ஸமூஹத்தின் க்ஷேமங்களின் பொருட்டேயாம். மனிதன் குடும்ப சிந்தையாலும், ஜீவனக்கவலையாலும் அலைக்கப்பட்டு தெய்வத்தை மறந்து ஓடியாடிநிற்கும் காலத்திலும்கூட அவனுடைய பிரதிநிதியாயிருப்பவன் மூலம் கோவிலில் பூஜை நடத்தப்பட்டுவருகிறது. தேவாலயத்தில் செய்யப்படும், நித்ய நைமித்திக பூஜைகளும் உத்ஸவங்களும், ராஜா பிரஜைகள் இவர்களின் அபிவிருத்தியின்பொருட்டே செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பூஜையிலும் உத்ஸவத்திலும் இப்படியே ஸங்கல்பம் செய்ய விதியேற்பட்டுளது. மிகுந்த கஷ்டதசை ஒருவனுக்கு ஏற்பட்டால் அதிலிருந்து மீளவேண்டி அவன் கோவிலுக்குப்போய் பகவானைப் பூஜிக்கிறான். நல்ல நிலைமை அடைந்தவர்களும் தங்களுக்கு ஏற்பட்ட க்ஷேமத்திற்காக பகவானிடம நன்றிசெலுத்தக் கோவிலுக்குப் போகிறார்கள். ஆகவே நகரங்களிலோ கிராமங்களிலோ ஜனஸமூஹ க்ஷேமத்தை விருத்திசெய்யவே தேவாலயம் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதும், அதன்மூலம் ஒவ்வொரு மனிதனும் க்ஷேமமடைய முயற்சிக்க வேண்டியதும் நிச்சயமாகிறது.

தேவாலய நிர்வாஹத்தில் லௌகிக அம்சம், வைதிக அம்சமென்று இருவகை இருக்கிறது. தெய்வங்களுக்கு ஏற்பட்டுள்ள திரவியங்களை வீணாக்காமல் அந்த தர்மத்தின் நோக்கத்தை அநுஸரித்து ஜாக்கிரதையாகப் பரிபாலனம் செய்வது லௌகிக அம்சமாகும். டிரஸ்டிகள் என்ற பெயருக்கு அதுவே முக்யமான அர்த்தமாகும். உத்ஸவகாலங்களிலும், மற்ற ஸமயங்களிலும் டிரஸ்டிகளுடைய கடமையை ஆகமசாஸ்திரமே பல விடங்களில் வகுத்துக் கூறியுள்ளது. பெரிய பிரம்ம உத்ஸவாதி காலங்களில் ஏராளமாக ஸேவார்த்திகள் கூடுவார்கள். அவர்களுக்கு வேண்டிய ஸுகாதார வஸதிகளையும், ஜலவஸதிகளையும் டிரஸ்டிகள் செய்து கொடுக்கவேண்டும். ஜனங்கள் தங்குவதற்காகப் பல விடங்களில் பந்தல்களை அமைக்கவேண்டும். பல வித வைத்யசாலைகளை ஏற்படுத்த வேண்டும். இது போன்ற பல கடமைகளையும் பரிஷ்காரங்களையும் ஆகமமே கூறியிருக்கிறது. இக்காலத்தில் இத்தகைய விஷயங்களில் கவனம் செலுத்தி ஜனங்களுக்கு நன்மை செய்யும் டிரஸ்டிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

மேலும் ஒவ்வொரு தேவாலயங்களிலும், அந்தந்த ஸ்தல மஹிமைகளையும், மூர்த்திகளின் மஹிமைகளையும் எல்லா தேசத்தினரும் எளிதில் அறியுமாறு முக்யமான பாஷைகளில் வெளியிடவேண்டும். அத்துடன் அவ்வப் போது நடக்கும் உத்ஸங்களின் தாத்பர்த்தையும் விளக்கித் துண்டு பிரசுரம் வெளியிட வேண்டியது அவச்யமாகும். இப்படிச் செய்தால் ஜனங்களின் பக்தி சிரத்தைகள் அதிகரிக்கஹேதுவுண்டாகும்.

கோவில் நிர்வாஹத்தில் வைதிக அம்சம் மிக முக்யமானது. பகவானுடைய ஸான்னித்யமானது பூஜகர்களின் மந்திர சக்தியாலும், பூஜா வைபவத்தாலும் தான் நிலை பெறவேண்டும். இப்போது எங்கும் டிரஸ்டிகள் வைதிக கார்யங்களைப்பற்றி கவலைப்படுவதேயில்லை. அது தங்களுடைய கடமையில் சேர்ந்ததல்லவென்று நினைத்தார்களோ? அல்லது அவ் விஷயத்தில் தங்களுக்கு பரிசயம் இல்லாததால் அலக்ஷ்யமாயிருக்கிறார்களோ தெரியவில்லை. பூஜகர்கள் தங்களுடைய கடமைகளை ஸரியாக நடத்துகிறார்களாவென்று கவனிக்க வேண்டியது டிரஸ்டிகளின் கடமை. பூஜகர்கள் அவச்யமான வேத மந்திரங்களையும் பூஜா விதிகளையும் மட்டுமாவது நன்கு அறிந்து கொண்டிருக்கிறார்களாவென்று பரிசீலிக்கவேண்டியதும் டிரஸ்டிகள் கடமை. யோக்யதைக் குறைவுள்ள பூஜகர்களுக்கு நல்ல ஆகமப்பயிற்சி செய்விக்கவேணும். பூஜகர்கள் ஸதாசார ஸம்பந்நர்களாயும் கர்மாநுஷ்டானபரர்களாயுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியதும் டிரஸ்டிகள் கடமையே. இவ்வாறு எவ்வளவோ பரிஷ்காரங்கள் உடனே செய்யப்படவேண்டியவைகளாயிருக்கின்றன.

புதிய போர்டு மெம்பர்கள் இவ்விஷயங்களில் கவனம செலுத்தி க்யாதி பெறுவார்களென்று நம்புகிறோம்.

25 ரூபாயில் உபநயனம்

குடந்தையில் ஆரம்பம்

கவர்ன்மெண்ட் காலேஜ் மாஜி பிரின்ஸ்பாலும் தனிகருமான ஸ்ரீ டி. கே. வெங்கடராமய்யர் அவர்கள் தமது குமாரனுக்கு கும்பகோணம் ஸ்ரீசங்கரசாரியர் ஸ்ரீமடத்தில் புதிய ஏற்பாட்டின்படி ரூ. 25 செலவில் உபநயனத்தை நடத்தினார்.

இத்துடன் இரண்டொரு ஏழைமாணவர்களுக்கும் தமது செலவில் தர்ம உபநயனமும் நடத்தி வைத்தார். (ந-நி)

மதஸ்தாபன போர்டு

புதிய மெம்பர்கள் நியமனம்

சென்னை ஹிந்து மதஸ்தாபன போர்டில் காலியாகும் மூன்று ஸ்தானங்களுக்கு கவர்ன்மெண்டார் புதிய நியமனம் செய்துள்ளார்.

திருச்சி அட்வகேட் ஸ்ரீ நாராயணஸாமி பிள்ளை. சேலம் ஸ்ரீ ராமசந்திர செட்டியார், சென்னை பாரிஸ்டர் ஸ்ரீமான் மன்னூர் நாயர் ஆகிய மூன்று பேர் நியமிக்கப் பட்டனர். திவான் பஹதூர் டி. எம். நாராயணஸாமி பிள்ளை போர்டு தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் காமேச்வர ராவ் என்றவர் ஏற்கனவே மெம்பராயிருந்து வருகிறார்.

மஹாமஹோபாத்தியாய

ஸ்ரீ ராமானுஜாசாரியர் காலமனார்.

பாஷா பாரத துரந்தர மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் எம். வி. ராமானுஜாசாரியர் அவர்கள் சென்றவாரம் வெள்ளிக்கிழமையன்று குடந்தையில் காலமான செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். தமிழ் பாஷையில் அவர் சிறந்த வித்வான். கும்பகோணம் காலேஜிலும், வேறு இடங்களிலும் அவர் வெகுகாலம் உபாத்யாயராக இருந்தார். ஸர்வகலாசாலையில் தமிழ் பரீக்ஷாதிகாரியாயும் இருந்து வந்தார்.

ஸநாதந தர்மாநுஷ்டானத்தில் சிரத்தையுள்ளவர். ஆலயப்பிரவேச சட்டத்தை எதிர்த்து ஸர்காருக்கு எழுதியுள்ளார். குடந்தையில் பிராம்மண ஸபை முதலிய பொது ஸ்தாபனங்களிலும் ஸம்பந்தமுள்ளவர். இவர் மஹாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்துள்ள உபகாரம் உலகமறிந்தது. மாகாணமெங்கும் நல்லமதிப்பை பெற்றவர். இவரது மரணம் தமிழ் பாஷைக்கும், முக்யமாக ஸநாதந தர்மிகளுக்கும் ஓர் பெரிய நஷ்டமே.

குடந்தையில் சைத்ர உத்ஸவம்.

வேதபாராயணச் சிறப்பு.

கும்பகோணத்தில் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமிக்கு இவ்வருஷம் சைத்ரோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ரங்கஸாமி அய்யங்கார் அவர்கள் ஒவ்வொரு ஸமயத்திலும் கூடவே ஸ்தலத்தில் இருந்து ஸரியான காலத்தில் புறப்பாடுகளை நடத்தி வைத்தது பாராட்டத்தக்கது.

இவ் உத்ஸவத்தில் வழக்கம் போல், வேதபாராயண அத்யாபக கோஷ்டிகளும் வெகு நன்ருக நடைபெற்றன. வெளியூர்களிலிருந்தும் வெகு பேர் இதற்காக வந்திருந்தனர். இந்த கோஷ்டிகளே உத்வத்தைப் பெரிதும் சிறப்பித்தன வென்பது மிகையாகாது.

அய்யங்கார் தெருவாரால் நடத்தப்பட்டு வரும் வேதபாராயண கோஷ்டியும், ததீயாராதனம் முதலியவைகளும் நன்கு நடைபெற்றன.

திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு ஷை தெருவில் வேதபாராயணகாரர்களுக்கு ஸம்பாவனை நடத்தப்பட்டது. அந்த ஸதஸ்ஸுக்கு மஹாமஹோபாத்யாய் பண்டிதராஜ "வித்வத்கவி" ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமாசாரியஸ்வாமி அக்ராஸனம் வஹித்தார்.

திருக்கருகாவூர், தார்மிக ச்ரேஷ்டரான ஸ்ரீமான் டி. எல். ஸுப்பய்யரவர்கள் வேத மஹிமை, பிராம்மண கௌரவம், காயத்ரியின் மஹத்வம் முதலிய அரிய விஷயங்களைப்பற்றி கேட்போர் பரவசப்படும்படி வெகு கம்பீரமாகப் பிரஸங்கம் செய்தார்கள்.

ஸுமார் 50 பேர்களுக்கு ஸம்மானம் செய்யப்பட்டது. அக்ராஸனாதிபதிக்கும், உபந்நியாஸகருக்கும் மாலையிட்டு உபசார மொழிகள் கூறப்பட்டு ஸதஸ் நிர்விக்கனமாகப் பூர்த்தியாகியது. ஸ்ரீமான் ஸுப்பய்யரவர்கள் தமது ஸொந்தச் செலவில் அங்கு கூடியிருந்த வேத வித்வான்களனைவருக்கும் தக்ஷிணை வழங்கியது மிகவும் பாராட்டத்தக்கது.

ஸ்ரீசாரங்கபாணிகோவில், வேத அத்யாபக மிராசுதார்களான பாட்டராசாரியர்களும் வழக்கம்போல் மேற்படி இரண்டு கோஷ்டிகளையும் நன்கு நடத்தினர்கள். ததீயாராதனமும் நன்கு நடைபெற்றது.

திங்கள்கிழமை இரவு 7மணிக்கு பாராயணகாரர்களுக்கு ஸம்பாவனை நடத்தப்பட்டது. கோவில், டிரஸ்டி ஸ்ரீ ஹரிராவ், ஸ்ரீ ஜி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், முதலிய பலர் வந்திருந்தனர். ஸ்ரீமான் கே. எஸ். பாட்ராசாரியர் எம். ஏ. மாஜி பிரின்ஸிபால் அவர்கள் தலைமை வகித்து 50 பேர்களுக்கு ஸம்பாவனை வழங்கினர். மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமிகள், அக்னிஹோத்ரம் கோபால தேசிகாசாரியர் முதலியவர்கள் கோஷ்டிச்சிறப்பைப்பற்றிப் பேசினர்கள். அக்னிஹோத்ரம் ஸ்ரீசக்ரபாணி பாட்ராசாரியரால் தலைவர் முதலியவர்களுக்கு மாலையிட்டு உபசாரமொழி கூறப்பட்டு ஸபை பூர்த்தியாகியது.

ஸப்த ஸ்தான உத்ஸவம்

ஸ்ரீ ஆதிகும்பேச்வர ஸ்வாமிக்கு ஸப்த ஸ்தான உத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஸ்வாமி கோவிலிலிருந்து புறப்படும் ஸமயம் ஜனக்கூட்டம் தாங்கமுடியாமல் கூடியிருந்தது. விசித்ரமான கம்பீரமான பல்லக்கில் ஸ்வாமியும் ஸ்ரீமங்களாம்பிகையும் திவ்யஸேவை கொடுத்ததை பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கண்டு பக்தி பரவசமாயினர். ஸ்வாமி எழுந்தருளிய எல்லா ஸ்தலங்களிலும், ஜனக்கூட்டம் எப்போதையும்விட அதிகமாகவே இருந்தது.

கோவில் அதிகாரிகளின் சிரத்தையைப் பொது ஜனங்கள் பாராட்டினர்கள். ந.கி.

ஸ்ரீ பராங்குச பக்த ஸபை திருக்குடந்தை

செவ்வாய் காலை 8-மணிக்கு ஷை ஸபை கூடியது. பல லௌகிக ஆஸ்திக ப்ரமுகர்களும் பட்டாசார்களும் வித்வான்களும் விஜயம் செய்திருந்தனர். ஸபையின் உபன்யாஸகர் சிரோமணி ப. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், ஸ்ரீ ஆராவமுதன் இப்பால் கண்டருளின, சைத்திரோத்ஸவத்தின் சீர்மையை எடுத்துரைத்து, இவ்வளவு பெருமையையும்அனுபவிக்கக் காரணமான மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார்அவரையேதலைமைவகிக்குமாறு அறிவிக்க அனைவரும்ஆமோதிககவே கார்யதரிசி வக்கீல், டி. ஆர். ஆனந்தாச்சாரியர் தலைவருக்கு மாலையிட தலைவர் முன்னுரை மொழிந்தபின் இ. கி. ஸ்ரீநிவாஸாச்சாரியர் சந்தன தாம்பூலம் வழங்க டிரஷரர் வககீல் ஏ. ராமஸ்வாமி அய்யங்கார் ஊர்குடி ராமாநுஜய்யங்கார் முகமாக வழக்கம் போல் அத்யாபக ஸ்வாமிகளுககு ஸம்பாவனையை நடத்தினர். வித்வான் ஸ்ரீ உ. வே. ரா. ஸ்ரீ நிவாசதாத்தாசாரியர் ஸபையின் நோக்கத்தையும் இது மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமெனவும் தக்ககாரணங்களுடன் விரிவாக உபன்யாஸித்ததும் தலைவர் முடிவுரை மொழிய வக்கீல் வரதாசாரியர் அனைவருக்கும் வந்தனோபசாரம் கூற 9-30 மணிக்கு ஸபை பூர்த்தியாகியது.

(ந-கி)

ஸநாதன தர்ம மஹாஸபை 6வது ஆண்டு நிறைவு விழா

ஆத்தங்குடி

விக்ரம-ளு சித்திரைமீ 5உ (17-4-40) புதன்கிழமை இரவு 8 மணிக்கு சிருங்காரமாக அலங்கரிக்கப் பெற்றிருந்த பந்தலில் ஸ்ரீ ஆவணி சிருங்கேரி ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகளவர்கள் தலைமையில் வைபவம் சிறப்பாக ஆரம்பமாயிற்று உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் ஸ்திரீபுமான்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். சபைச் சார்பில் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும், தலைவர் ஸ்ரீ முத்துசாமி அய்யங்கார், உபதலைவர் ஸ்ரீ சு. வீர. கதிரேசன் செட்டியார் இருவர்களும் வரவேற்புப் பத்திரங்கள் ஸ்வாமிகளுக்கு வாசித்தளித்தார்கள். ஸநாதன தர்மத்தின் தத்துவங்களையும், கிரமமாகவும், ஸ்திரமாகவும் மானிட வர்க்கம் நற்கதி அடைய ஏற்பட்டுள்ள வர்ணாச்ரம தத்துவங்களையும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற சதுர்வித புருஷார்த்தங்களின் நுட்பங்களையும், ஆத்மஞானத்தை அலக்ஷயம் செய்து உலகாயதக் கொள்கையை அவலம்பனம் செய்து உலக நாசத்திற்கு ஹேதுவாகுமென்றும், தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டம் வேதாகம சாஸ்திர விருத்தம் என்றும், அதனால் பல இன்னல்கள் விளையுமென்றும், மத சமூக சம்ரக்ஷணம் செய்வது அரசனின் கடமையென்றும், ராமராஜ்யம் நடைபெற்ற மேன்மையை விளக்கி அரசர்கள் அதற்கேற்ப நடக்கவேண்டுவது இன்றியமையாததென்றும், எண்ணுதற்குறிய காலமுதல் வேத சாஸ்திர கோட்பாடுகளுக்கேற்ப நடந்து வந்த நமது மூதாதையோர் சீரும் சிறப்பும் பெற்றிருந்ததை புராணங்களும் சரித்திரங்களும் உணர்த்துகின்றதென்றும் அவர்களின் அடிச்சுவட்டை நாம் பின்பற்றி நடக்க வேண்டுவது அவச்யம் என்றும் ஊர்கள் தோறும் சபைகள் அமைத்து கட்டுப்பாடுடனும் உறுதியுடனும் ஸநாதன தர்ம பிரசாரம் செய்யவேண்டுமென்றும் சோதனை மிகுந்த இக்காலத்தில் இச்சபை செய்து வரும் தொண்டு சிலாகிக்கத்தக்கதென்றும் இச்சபை மேலும் மேலும் அபிவிருத்தி அடைந்து நற்கருமங்கள் புரிந்துவர இறைவன் அருள் அளிப்பாரென்றும் விஸ்தாரமாக வேத சாஸ்திரங்களிலிருந்தும் நவீன ஸைன்ஸிலிருந்தும் மேற்கோள்களுடன் உபமான உபமேயங்களைக் கொண்டு பண்டிதரும் பாமரரும் ரஸிக்கும்படி எளிய தமிழில் அருள்மொழி பகர்ந்தார்கள். ஸ்ரீ தி. ப. ஜெகதீசய்யர் வந்தனோபசாரங் கூற இரவு 10¼ மணிக்கு விழா இனிது நிறைவெய்தியது.

20—4—40 வெள்ளிக்கிழமை நகரத்தார் ஸ்வாமிகளுக்கு பிக்ஷை நடத்தி வைத்தார்கள். அன்று மாலை நகரத்தார்கள் ஜகத்குருவைசிவாலயத்திற்கு கோவில்மரியாதையுடன் அழைத்துச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வைத்தார்கள். ஆத்தங்குடி, முத்துப்பட்டணம், வெளூர் பக்த கோடிகள் தினந்தோறும் நடைபெற்று வரும் பூஜா காலங்களில் கலந்து ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத சந்திரமௌளீஸ்வர ஸ்வாமி அருளுக்கு பாத்திராகி வருகின்றனர். (ந-கி)

நன்னிலம் தாலூக்கா நல்லமாங்குடி ராமாயண விலாஸில், உடையாளூர் ராமாயணம்

அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள்

ஸ்ரீமத் ராமாயணம்

ஏப்பிரல் 21 தேதி முதல் பிரதி தினம் இரவு 7-30 மணிக்கு உபன்யசிக்கிறார்கள். 28-ம் தேதி பட்டாபிஷேகம் அனைவரும் வந்து கதாச்ரவணம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

G. பிசசுமணி அய்யர்.

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி.

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர் வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி.

வேத உபதேசம்

சென்னை வேத வித்வத் ஸமாஜத்தில் பிரும்மஸ்ரீ விஷ்ணம்பேட்டை ராமஸ்வாமி தீக்ஷிதரவர்களின் உபந்யாஸத்தின் ஸாராம்சம் :—வேதம் என்பது ஈஸ்வரனின் வாக். வேதமானது ஈஸ்வரனைப்பற்றி சொல்லுகிறது. பூர்வ காண்டமான கர்ம காண்டம் என்பது ஒவ்வொரு வர்ணத்தானும் ஆச்ரமத்தானும் தனது தனது வர்ணாச்ரமத்திற்கு தக்கவாறு செய்யவேண்டிய கர்மாக்களை சொல்லுகிறது. அப்படி வேதோக்தமான கர்மாக்களைச் செய்து சித்த ஸுத்தி அடைந்து அதன் மூலம் ஞானத்தையும் அடைந்து நமக்கு லக்ஷ்யமான நமது சொந்த வீடாகிய மோக்ஷம் என்ற நான்காவது புருஷார்த்தத்தை தேடவேண்டும். மோக்ஷமாகிய புருஷார்த்தத்தை அடையவே உபாயமான தர்மம் என்ற முதல் புருஷார்த்தத்தை அவலம்பிக்க வேண்டும். தர்மாசரணம் செய்யவே பகுத்தறிவோடு கூடின மனுஷ்ய ஜன்மாவை வேதத்தில் அதிகாரம்பெற்ற பிரும்மண ஜன்மாவையும் கர்மாக்களைச் செய்ய சரியான அங்கங்களோடு கூடிய சரீரத்தையும், பத்னீ பிள்ளைகளையும் பகவான் கொடுத்து பேருதவி செய்திருக்கிறார். நாம் அவைகளை வீண் செய்யாமல் தர்மாசரணம் செய்யவேண்டும். தர்மத்திற்கு விரோதமன்னியில் அர்த்த காமங்களுக்கும் நடுவத் தகரார் வரும் காலத்தில் அர்த்த காமங்களை ப்ருஷ்டதக்காணம் செய்து தர்மத்தையே அனுஷ்டிக்க வேண்டும். ஏனெனில் தர்ம பத்னீயாயும், பார்யாயும் ப்ரியையாயுமான மனைவியிடத்திலிருந்து எப்படி ஒரு மனிதன் தன் தர்மத்தையும், பிள்ளை ரூபமான அர்த்தத்தையும், காமாதி ஸுகங்களையும் அனுபவிக்கலாமோ அதைப்போலவே தர்மம் என்ற புருஷார்த்தத்தால் தர்மத்தையும், அர்த்தங்களையும, காமாதி சுகங்களையும் அனுபவிக்கலாம். அமுத்ரத்திலும் மோக்ஷத்தையும் அடையலாம். இதை வேத ப்ரதிபாத்யனான மஹா விஷ்ணுவானவர் தன் ஒவ்வொரு அவதாரத்திலும் நன்றா நடத்தி காட்டியிருக்கிறார். தர்ம விருத்தமான அர்த்த காமங்கள் அதப்பதனத்திற்கே காரணம். சுக்ராச்சாரியார் மூலம் வாமன ரூபியாய் வந்தவன் விஷ்ணுவென்றும் காபட்யமாய் வந்திருக்கிறார் என்று தெரிந்தும் யாக சமயத்தில் யார் எதைக் கேட்டாலும் தருகிறேன் என்று சொன்ன பேச்சை மாறினால் தர்ம விரோதமென்று ஒரு வார்த்தையை உல்லங்கனம் செய்து தன் ராஜ்யத்தின் நாசத்தையும் கவனியாமல் தானம் செய்து விஷ்ணுவை தனக்கு கடனாளியாகச் செய்துகொண்டு தன் வீட்டு வாயிற் காப்பானாகவும் பகவானைச் செய்துவரும் இந்திரப்பட்டத்திற்கும் தயாராகலானான். ராஜ்யம் போகப்போகிறது என்று நினைத்துக் கொடாதே என்று அர்த்த காமத்தில் ருசியை உண்டுபண்ணி இருக்கிறது.

சிதம்பரம்.

ஸனாதன தர்ம அபிவிருத்தி

பிர்மஸ்ரீ எஸ். பாண்டிய ராஜாவாத்தியார் அவர்கள் தேவசபையில் புதுப்பஞ்சாங்கம் வாசித்தார் சில தீக்ஷிதர்களும் இதை ஆதரித்துக் கேட்கக்கூடவுமிருது முடித்துவைத்ததாகக் கூறப்படுகிறது. முடிவில் ஸனாதனதர்மம் விருத்தியாக வேண்டியும், நமது அரசர் பெருமானுக்கு தற்போதையயுத்தத்தில் ஜெயம் கிடைக்க வேண்டியும், பொது தீக்ஷிதர்களின் சார்பாக பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

ஸ்ரீமான் பாண்டிய ராஜாவாத்தியார் அவர்கள் தில்லை சைவசித்தாந்த ஸபையில் பிரதினமும் சைவபுராணங்களை வாசித்து வருவதாகவும் அறிகிறோம். ந. நி.

தென்னாற்காடு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்

சிதம்பரம் கீழ ஸன்னதி நெ 1. பிர்மஸ்ரீ பஜனை டி. ராஜரத்தின தீக்ஷிதர், அவர்களுடைய கட்டிடத்தில், தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கஸ்தாபனபோர்டு, ஜோதிஷ வித்வான் எஸ். வெங்கிட்டராம உபாத்தியாயர் அவர்களால் வேதகோஷங்களுக் கிடையே கூட்டப்பட்டது. ஸ்ரீமான்கள் எஸ். சாம்பநடராஜ தீக்ஷிதர், எஸ். ராமாவாத்தியார், யஜுர் வேதம் வி. எஸ். சுந்தரேச சாஸ்திரிகள் எஸ். ராமாவாத்தியார், சேலம் வெங்கடேச தீக்ஷிதர், ஆர். கல்யாண சுப்பிரமணிய தீக்ஷீதர், பொன்மணி அய்யர், முதலான ஆஸ்திகபிரமுகர்களும் விஜயம் செய்து, மேற்படி சபை விருத்தியாக வேண்டி ஆசீர்வதித்தார்கள். ந. நி.

தில்லைச் சைவ சித்தாந்த ஸபை.

காங்கிரஸ்காரரின் வாக்குறுதி

ஆலயப்பிரவேசத்திற்கு ஆதாரமில்லை

சிதம்பரம் கீழ ஸ்ன்னதியில் தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்க தலைமை ஆபீஸிற்கு எதிரில் “தில்லைச் சைவ சித்தாந்த சபை” சென்ற ஞாயிறன்று மாலை பிர்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாய தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களது தலைமையின்கீழ் அண்ணாமலை சர்வ கலாசாலை உயர்திரு கதிரேசன் செட்டியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. டிப்டி கலெக்டர் ஸ்ரீ ரெங்காசாரியார் அவர்கள் மேற்படி நிலையத்திலுள்ள நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

சிதம்பரம் ஹிந்து மதாபிமானிகளின் சார்பாகவும் தென்னாற்காடு ஜில்லா வர்ணாஸ்ரம ஸ்வாரஜ்ய சங்கத்தின் சார்பாகவும், பிர்மஸ்ரீ ஏ. ஸி. வெங்கிடசுப்ரமணிய தீக்ஷிதர் அவர்கள் அடியிற்கண்ட, பிரபலஸ்தர்களால் கையெழுத்திடப்பட்ட, மகஜரையே தில்லை சைவ சிந்தாத்தசபை ஸ்தாபகர் ஸ்ரீ மான் கே. முத்து கிருஷ்ண பிள்ளை அவர்களுக்கும், மற்றும், ஷை கூட்டத்தலைவர், திறப்பாளர், முதலானவர்களுக்கும், கொடுத்தார்.

ஷை மகஜர் கூறிய தாவது:—

“நம்முடைய பெருமை வாய்ந்த, தெய்வீகமான, ஸ்ருதி, ஸ்மிருதி, வேதாந்த, ஆகம, சைவசித்தாந்த, கொள்கைகளுடன் கூடியதொன்று. நமது மேன்மையான் இந்துமத ஆசார பழக்க வழக்கங்களையும் அனுஷ்டானங்களையும், அனுசரிக்காது பிடிவாதத்துடன் நிராகரிகும், தற்போதைய ஹிந்துமத விரோதமான காங்ரஸ் கொள்கைளான “ஹரிஜண ஆலயப் பிரவேசம்,, முதலான இயக்கங்களில் ஈடுபடாமல் இச்சபை உழைத்து வருமா?

ஷை மகஜர் மேற்படி சபையைக் கூட்டுவதற்கு முன்னாடியே கொடுக்கப்பட்டது. ஷைசபையின் ஸ்தாபகர் ஓர் காங்ரஸ் காரர் தற்போதும் சிதம்பரம காங்ரஸ் கமிட்டியிலும் அங்கத்தினராக இருந்து வருவதாகவும் பிரபல காங்ரஸ் முனிசிபல்கௌன்சிலராக இருந்து வந்த வாரகவும் தற்போதும் காங்ரஸ் இயக்கங்களில் ஈடுபட்டவரென்றும் தெரிய வருகிறது.

ஷை காங்ரஸ் காரர் ஷை மகஜருக்கு அடியிற்கண்ட பதிலை எழுத்து மூலம் அளித்துள்ளார்:—

“இந்து மதாபிமானிகள் இன்று கொடுத்துக்கொண்ட வேண்டுகோளை அறிந்து கொண்டோம். ஸ்ரீ சைவசித்தாந்தத்திற்கு சிவ ஆகமங்கள் பிரமாணங்கள் ஆகும் அந்த ஆகமங்களிலே, தீண்டத்தகாதவர் கோ ஆலயம் முதலான புண்யஸ்தானங்களிலும் வருவதற்கு தடைசெய்யப்பட்டிருக்கிறது. இத்தில்லைச் சைவசித்தாந்த சபையும் ஷை கொள்கையையே பின்பற்றும்” ந. நி.

ஸ்காந்தபுராண பிரவசனம்

நன்னிலம் தாலூகா வடவேர்கிராமதில் சுமார் இரண்டுமாத காலமாய் பரித்தியூர் பிர்மஸ்ரீ வைத்திநாத தீக்ஷிதரைக்கொண்டு நடத்திவந்த ஸ்காந்தம் ஸ்ரீகாசீகண்டம் புராணம் சிவசர்மா என்கிற பிரும்மஸ்ரீ விஷ்ணு பக்தர்கள் பூலோகம் முதல் வைகுண்டாந்த லோகவர்ணநம் முதல் வைனதேய அமிருத கடாநயநாந்த பூர்வமாக சரித்திரம் வெகு அழகாக பூர்த்தியடைந்து பலவூர் ஜனங்கள் வந்து சிரவனம் பண்ணி ஆனந்தமடைந்து அவர்களுடைய வேண்டுகோளில் பேரில் உத்தரபாகமும் 10—4—40 முதல் நடைபெறும் இந்த சின்னகிராமத்தில் இப்படிபோல தர்மகாரியங்கள் நடப்பது யாவரும் ஆனந்திக்கத்தக்கது. (நநி)

ஹரிஜனத் தொண்டில் புகுந்து பிராயச்சித்தம் செய்துகொண்டவர்.

ஆழ்வார் திருநகரில் பிரபல பிரபந்த உபாத்தியாயராயிருந்துவந்த பேராலி ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் 5—4—40ல் காலமானார். தீண்டாதார் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி மிக மும்மரமாயிருந்த மாஜி காங்கிரஸ் மந்திரி ஆக்ஷியில் ஆழ்வார் திருநகரில் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியில் தீவிரமாய் முன் வந்து அட்டஹாஸம்செய்து ஒன்றும் பலிக்காமல் போகவே பின்னால் நற்புத்தி பெற்றுதீண்டாத அன்பர்களுடன் சேர்ந்து குலாவியதற்காக பிராயச்சித்தம் செய்துகொண்டு வனமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளிடம் சென்று மேற்படியார் தன்னை மன்னிக்குமாறு பிரார்த்தித்து கேட்டுக்கொண்டதாயும் சொல்லப் படுகிறது. இவரது அந்திமகாலதில் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியில் சேர்ந்துழைத்ததற்காக மிகவும் வருந்தியதாயும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. (ந-நி)

தென் திருப்பேரையில் ரதோத்ஸவம்

தேர்மீது தேசீயக்கொடி

சனாதநிகள் பஹிஷ்காரம்

ஆழ்வார் திருநகரின் கீழ்புறமுள்ள தென்திருப்பேரை தேவஸ்தான திருநாள் ரதோத்ஸவத்தன்று தேர்மீது தேசீயக் கொடி கட்டப்பட்டிருந்ததாயும் அதனால் சனாதனிகள் தேரிழுப்பதில்கலந்துகொள்ளவில்லையெனவும் சொல்லப் படுவதுடன் முதல்நாள் நிலைசேர வேண்டிய தேர் மறுநாள் உதயம் வந்ததாயும் தெரிகிறது. சனாதனிகள் பஹிஷ்கார நடவடிக்கை நகரெங்கும் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருப்பதாயும் சொல்லப்படுகிறது. (ந-நி)

காங்கிரஸுக்கு புத்தி

நந்தனார் பக்தி

(K. A. ராமசாமி, கோவிலூர்)

மகாஞானியான எமது நந்தனாராம் பெரு நெருப்பைப் பூர்வபட்சிகள் பிடித்தணைத்து கொள்ள ஆசைபடுவானேன்? நந்தனாரை கோவிலுக்குள் விட வில்லையாயென்பானேன்? பெரியபுராணம் அவரை பற்றி என்ன சொல்கின்றது? ஆதனூரில் புலயர் குலத்தில் அவதரித்த நந்தனார் என பெயர் வாய்ந்த அவர் ஊர்புலையனென்றுந் தொழிலுடையவராயிருந்தனர் அரனை பாடும் வாயால் நரனைபுகழார். சிவலாயங்கள் தோறுஞ்சென்று வாயிலின் புறத்தே நின்று மெய்யன்போடு வணங்கி அவன் பின் மிகுதியலே ஆனந்த கூத்தாடுவார், பாடுவார், குதிப்பார். ஓர்நாள் திருப்புன்கூருக்கேகி திருவாயிலினின்று சுவாமியை இப்புலை சென்மத்தானே நேரே தெரிசிப்பதற்கில்லையே யென ஏங்கினார்! உடனே சிவபெருமான் நந்தியை விலகும்படி யருளி தரிசனங்கொடுத்தனர் அப்போது கூட தற்போதத்தால் இறுமாப்புடன் உள்ளே நுழையாமல் வாயிலுக்கு வெளியே நின்று தற்சுதந்தரமிழந்து வணங்கி கோயிலின் வெளியே வலம் வந்து நடனஞ்செய்து திரும்பினார்.

இவ்வாறே பல சிவாலயங்களையும் வெளியிலிருந்தே வணங்கி தம் ஜாதிகேற்ற பல தொண்டுகளை செய்து வருபவர். பூர்வீக புண்ணியத்தாற் சிதம்பரத்தை தெரிசிக்க வேண்டுமெனும் பேரவா தம் முள்ளத்தில் அடிக்கடி உதிக்க யாது செய்வாராயினர்!

அந்தச் சிதம்பரத்தையடையலாமெனின் அவ்வூரில் உட்புகுந்து தரிசித்தற்கு நாம் ஜாதி யிடங்கொடாது இதுவும் எம்பிரனறிவருளேயென்று அங்குபோககூடாதவராயிருந்தனர் ஆனால் அவர் அவ்வாறிருந்தும் அவரையாட்கொள்ளுஞ் சிவபிரான் அவரைவாளாவிடுவாரோ? அங்கு போக வேண்டுமென்னும் பேரவாவை நெருப்பி விட்டது போற்றூண்டுங்காலத் தெல்லாம் நாளைபோவேன் நாளைபோவேன் என்பார். இவ்வாறு பன்முறையுங் கூறிப்பல நாள் கழியப் பிறவிச்சாகரத்தைத் தாண்டும் பொருட்டு ஓர் நாள் புறப்பட்டு சிதம்பரத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார். தில்லை மூவாயிரவர்களாகிய பிராம்மணர்கள் யாகஞ்செய்வதால் அவர்கள் செய்யும் வேதாத்தியானத்தையும்! மடங்கள்நெருங்கி இருக்கின்ற சிறப்பையும் பார்த்துத் தமது இழிவான குலத்தை நினைத்து அச்சமுற்று அங்கு செல்லாமல் நின்றுவிட்டார்.

நடராஜரது ஆனந்த நடனத்தை தரிசிப்பது எப்படியென்றேங்கி அத்துயரோடு நித்திரை புரிந்தனர். அவரது திருவுள்ளத்தில் அமர்ந்திருக்கும் நடேசபிரான் அடியார்க்கெளியராதலின் அவர் கனவிற் தோன்றி புன்சிரிப்புடன் திருவாய்மலர்ந்தருளுவாராயினர் :—

“இப்பிறவி போய் நீங்க வெரியினிடை
நீ மூழ்கி முப்புரி நூன் மார்பருடன் முன்
னணைவா யென மொழிந்த
அப்பரிசே தில்லை வாழந்தணர்க்கு மெரி
யமைக்க
மெய் பொருளா னருளியம் பலத்தே
மேவினார்.”

“இந்த இழிந்த பிறப்பு நீங்க “நீ” நெருப்பில் மூழ்கி யெழுந்து தில்லை மூவாயிரவருடன் நம்மை வந்து தெரிசிப்பாய்” யென அருளிச்செய்து அவ்வாறே தில்லை மூவாயிரவர்களுக்கும் தீயை அமைக்க சொல்லி மறைந்தனர். அவர்களுந் தெற்கு திசையிலுள்ள மதிலின் புறதிற் கோபுர வாயிலின் முன்னே அக்னி குண்டத்தை அமைத்தார்கள். நந்தனாரும் நடேசபிரானுடைய குஞ்சிதபாதத்தைத் தியானித்து கொண்டே அக்னியை வலம் வந்து நெருப்பில் மூழ்கினார்.

மயக்கத்திற்கு ஏதுவான மொம்மை யோடு கூடிய சாரீரம் நீங்கித் திருமேனியிற் பூணூற் பிரகாசித்த பிரமனைப் போற்சடை முடியோடெழுந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார். தில்லை மூவயிரவர் தொழுதார். பிறகு நந்தனார் அவர்களோடே எழுந்தருளி கோபுரத்தை வணங்கிக் கனக சபையினெல்லையை அடைந்தார். பிறகு அவரை யாருங் கண்டிலர். எல்லோரும் ஆச்சரிய முற்றனர். சோஸ்த்திரஞ் செய்தனர். நடராஜருந்தவராஜரைத் தந்திருவடிகளைத் தொழிதிருக்கும்படி யருள் சுரந்தனர்.

எனவே அகங்காரமமகாரமற்றதவத்தின் மிக்காரம் நந்தனாரையே தீயில் மூழ்க செய்து ஆண்டருளினரென்றால் பிறரது துண்டு கோலாலுந் தற் போதத்தாலுங் கோவிலூர் நுழைய வேண்டுமென்பார் செய்யற் பாலதி யாது? சிவாலயத்துள் நுழைய வேண்டுமென்பது சிவப்பிரசாதம் பெறற்கோ?சிவகோபத்திற்குள்ளாகி நரகில் விழுவதற்கோ? நுழை வேண்டுமென்றாற் கடவுளருள் பெற்று நெருப்பிற்குதித்துத் தெய்வீகவடிவுற்றுத் தாராளமாய் நுழையலாமே. அதுவன்றோ அவன் அருள் பெறும் வழி? அவ்வாறுசெய்யின்யாமும் நந்தனாரைச் சிவமெனவே கொண்டு வணங்கல் போல் வணங்குவோமே? அதை விட்டு பழி பாவத்திற்கு அஞ்சாது செய்தல் அழகோ? நல்லவர் மனம் புண்படியுங் கடவுள் கோபத்திற்கு ஆளாவதுந்தானோ அஹிம்ஸாமார்க்கம்! நல்லகுரு! நல்ல சிஷ்யர்கள்! பளா பளா! நந்தனார் தீயிலிரங்கி பிறகு நுழைந்தமை உலகமுழுதும் அறிந்திருக்க மூடர்களை ஏமாற்றும் பொருட்டு நந்தனார் சிதம்பரத்தில் ஆலயத்தில் நுழையவில்லையா என்பது கண்மூடிக்க பேதிகூறும் வார்த்தையன்றோ! முழு பூசனிக்காயை சோற்றில் மறைக்க முடியுமா? முடியவே முடியாது. அடாது செய்பவர் படாது படுவர்.

ஆலயப்பிரவேசத்திற்காக உபவாஸம்.

“பிறரை நிர்ப்பந்தித்தோ பலாத்காரமோ ஆலயப்பிரவேச இயக்கம் வேலை செய்யுமானால் அது ஹரிஜனத் தொண்டு அல்ல” என்று அடிக்கடி காந்தி அவர்கள் கூறியுள்ளார்கள்(ஹூப்ளி, 17 ஏப்ரல்) பனவாஸியில் அகேக்ஷத்திரஸ்வாமி தரிசனம் வேண்டுமென்று ஹரிஜன சேவாசங்க காரியதரிசி, பதினான்கு தினம் உண்ணாவிரதம் தொடங்கியிருக்கிறார், ஆலயப்பிரவேசத்திற்கு சிறிதேனும் கோயில் அதிகாரிகள் சம்மதித்ததாக தெரியவில்லை. ஆகையால் இவருடைய உண்ணாவிரதம் கோவில் அதிகாரிகளை நிர்ப்பந்தபடுத்துவதாகவே ஆகும் இதை ஷெ சங்க காரியதரிசி உண்ணாவிரதத்தை நிறுத்திவிடுவார் என்று நினைக்கிறேன்.

[சௌரிராஜன்.]

புராணக் கதைகள்

கங்கையின் சாபவிமோசனம்

ஸகரசக்ரவர்த்திக்கு இரு மனைவிகள். ஈசனருளால் ஒருவளுக்கு அஸமஞ்சனும் மற்றவளுக்கு ஓர் மாம்ஸபிண்டமும் பிறந்தது. அப்பிண்டத்தை என் செய் வதென அறியாது அரசன் யோசித்த போது ஓர் அந்தணவடிவமாய்ப் பரமசிவன் வந்து அப்பிண்டத்தைத் துண்டித்து அறுபதினாயிரம் பாத்ரங்களில் வைத்தார். அதிலிருந்தும் அதி தீரரான அறுபதினாயிரம் புதல்வருதித்தனர். அவர்களனைவரும் கபில முனியின் சாபத்தால் சாம்பலாயினர். அவர்கள் கதியை நினைத்து ஸகரன் வருந்தி இறந்தான். அஸமஞ்சன் அம்சுமான் திலீபன் முதலியவர்கள் அவர்களுக்கு நற்கதியை அளிக்கும் கங்காதேவியை அவனிக்கழைத்துவர லக்ஷம் லக்ஷமாண்டுகள் தவம் புரிந்திறந்தனர். பகீரதன் பரமபக்தனாதலின் லக்ஷமாண்டு தவம் செய்து கண்ணனைத் தர்சித்தார். அவரைப் பணிந்து துதித்து தன் கோரிக்கையைத் தெரிவிக்க பகவான் நினைத்தமாத்திரத்தில் கங்கா தேவி விரைவாய் வந்த கண்ணனடி பணிந்து கட்டளை யாதெனக் கண்ணன் கங்கையை நோக்கி நீ ஸரஸ்வதியின் சாபத்தால் பூலோகத்திற்குச் செல்ல வேண்டுமல்லவா? நமது பக்தனான பகீரதனுடன் சென்று ஸகரபுத்ரர்களைச் சுத்தமாக்கி நமது சபைக் கனுப்பு. தடிபோல் விழ்ந்து முழுகுவோரைவிட கங்கையில் விதிப்படி ஸ்நானம் செய்வோர் பன் மடங்கு அதிக பயனைப் பெறுவர். அஷ்டமி ஏகாதசி, பர்வா துலா கார்த்திகை மாதம் அர்த்தோதயம் மஹோதயம் க்ரஹணம் முதலிய புண்ய காலங்களில் ஸ்நானம் செய்வோருக்கு அபரிமிதமான புண்யத்தையளி. மனிதர்களது பிரம்மஹத்தி முதலிய மஹாபாவங்களையும் பரிகரி. உனது ப்ரவாஹத்தில் உடலை விடுவோருக்கு யான் வைகுண்டமளிப்பேன். பாபிகள் உன்னிடமளிக்கும் பாபம் எனது பக்தர்கள் உன்னிடம் ஸ்நானம் செய்யும் போது அகலும். விக்னம் விலக விக்நேசனையும் பாபமொழிய பாஸ்கரனையும் ஆத்மசுத்தி யுண்டாக அக்னியையும் மோக்ஷமுண்டாக விஷ்ணுவையும் ஞானமுதிக்க ஈசனையும் அர்ச்சிக்க வேண்டும். அங்ஙனம் பூஜித்தபின் கங்கையைத் துதிப்பவரும் நினைப்பவரும் நீராடுபவரும் நற்கதி பெறுவார் எனக் கூறி மறைந்தார்.

பகீரதன் அங்ஙனம் பூஜை புரிந்து கங்கையைப் போற்றினான். கங்கையால் ஸகரரும் வைகுண்டம் சென்றனர். க்ருதயுகத்தில் பால் போலவும் திரேதையில் சந்த்ரன் போலும் த்வாபரையில் சந்தனம் போலவும் கங்கைப்ரகாசிப்பாள். கங்கையின் துதியைப் பாடுவோர் பாபமகலும், புத்திரனில்லாதவர் புத்திரனைப் பெறுவர்

கங்கை எங்கு எங்ஙனம் ஜனித்தவள் என நாரதர் வினவ நாராயணரிஷி கூறினார்.

ஸ்ரீக்ருஷ்ணன் கார்த்திகை பௌர்ணமியில் ஸ்ரீ ராதையைப் பூஜித்தாரல்லவா? அச்சமயம் அமரரனைவரும் அங்குவந்தனர். வாக்தேவி கண்ணனது மஹிமையைப் பாடினாள். அதைக்கேட்டு எல்லோரும் மகிழ்ந்து அவளுக்குச் சம்மான மளித்தனர். பிரமன் தூண்டுதலால் அரன் கண்ணனது கீதத்தைப் பாடினார். தேவரனைவரும் பரவசராயினர். ராதையும் க்ருஷ்ணனும் அதைக்கேட்டு ஜலமாகி உறுகிவிட்டனர். சிலகாலம் சென்றபின் தேவர் விழித்தெ

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க.)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

புராணக் கதைகள்.

7-ம் பக்கம் தொடர்ச்சி.

மூர்ந்து ஆதிதம்பதிகளை (ராதாக்ருஷ்ணர்களை) காணாது வருந்தினர். அப்போது பகவான் அசரீரியாக நின்று தேவர்காள் அஞ்சாதீர்கள்! எனது மூலமந்த்ரம் கவசம் ஸ்துதி முதலிய வேதஸாரத்தைக் கொண்டு கைலாஸநாதன் கங்கா ஜலத்தை எடுத்து ஓர் சாஸ்த்ர மியற்றுவதாக ப்ரதிக்ஞை செய்யட்டும். அதன் பின் என்னை நீங்கள் தர்சிப்பீர்கள் என்றார்.

மஹேசனுமங்ஙனமே சபதம் செய்ய பகவான் தேவியுடன் தர்சனமளித்தார். ஸ்ரீராதாக்ருஷ்ணரது சரீரம் உருகியபோதுண்டான ஜலமே பரம பாவனமான கங்கையானது. அந்த ஜலத்திற்கு தேவதையான கங்கை அழகிய பெண்ணுருவம் தாங்கி நின்றாள். ராஸமண்டலத்திலுள்ள பகவானது திரவரூபத்தைப் பார்த்துப் பார்த்து மூர்ச்சித்தாள். இதைக்கண்ட ராதாதேவி சினங்கொண்டு பகவானருகே ஓடிவந்தாள். கோபத்துடன் வரும் ராதையைக்கண்டு கங்கை அச்சமுற பகவான் அவளுக்கு அந்தரங்கமாக அபயமளித்தார்.

ராதை பகவானை நோக்கி, நாதா! தங்களிடம் பேராசைகொண்ட இவள்யார்? யான் ஜீவித்திருக்கும் போதே என் செல்வத்தை கொள்ளை கொள்ள வந்தவள்யார்? முன் இதே போல் விரஜை என்பாள் வந்தாள். என்னைக்கண்டு பயந்து நதியானாள், என்னை ஏமாற்றித் தாங்கள் அவளுக்கு இன்பமளித்துஏழு ஸமுத்ரங்களை உண்டு பண்ணினீர். சோபை என்னும் மற்றொருவள் என்னிடம் பயந்து சந்த்ரமண்டலம் சென்றாள், அவளுக்கும் தாங்கள் அருள்புரிந்து ரத்னம் பெண்களது முகம் வஸ்த்ரம், தேவாலயம் அரண்மனை முதலிய விடங்களிலுள்ள அழகை அவள் மூலமுண்டுபண்ணினீர். ப்ரபையையும் பிருந்தாவனத்தில் தம்முடனிருக்கக் கண்டேன். அவளும் ஸூர்ய மண்டலம் சென்று பதுங்கினாள். அரசன் புருஷ ஸமூகம், முனிவர் அழகுள்ள பெண்மக்கள் ஆகியவர்களிடமுள்ள தேஜஸை அவள் மூலமாகப் படைத்தீர். இங்ஙனம் சாந்தி, க்ஷமை முதலியவர்களும் தங்களை விரும்பி என்னிடம் பயந்து மறைந்தனர், என்று கூறி ராதை கங்கையைக் கடுஞ்சினத்துடன் நோக்கினாள், அப்போது கங்கை பகவானது பாதாரவிந்தத்தில் லயமானாள். ஆகையால் பூலோகம் முதல் கோலோகம் வரை ஒரு சொட்டு ஜலமில்லாது போயிற்று, ஹரிஹரப்ரம்மாதிகள் கண்ணனைச் சரணமடைந்தனர். பகவான் ஒருமுறை ராதையும் தானும் வேறு வேறாகவும் மற்றொரு முறை இருவரும் ஒருருவாகவும் தரிசனமளித்தனர். இதைக்கண்டு வியந்தவிண்ணவரது வேண்டுகோளுக்கிணங்கிக் கண்ணன் தன் தாளிலிருந்த கங்கையை அழைத்தார். அதிலிருந்து ப்ரம்மா சிறிது ஜலத்தைத் தன் கமண்டலுவிலேந்தி கங்கைக்கு ஸ்ரீ ராதா மந்த்ரத்தை உபதேசித்தார். கங்கைகோலோகத்தில் ராதையின் அம்சமாகவும் கைலாயத்தில் சிவன் சிரஸிலும் வைகுண்டத்தில் விஷ்ணுமனைவியாகவும் ஸத்யலோகத்தில் பிரம்ம கமண்டலத்திலுமிருக்கிறாள் அயன் வேண்டுதலால் விஷ்ணு கங்கையை மணக்க சாபமகன்று ஓர் கலையால் கோலோகஞ் சென்றாள்.

கோவிலூரில்

ஸ்ரீராமநவமி பஜனை கர்போத்ஸவம்

நாளது ஸூ ஏப்ரல்-மீ 7-உ ஞாயிற்றுக் கிழமை முதல் 17-உ புதன்கிழமை முடிய ஸ்ரீ ராம ஜெனனகர்போத்ஸவம் இவ்வூர் போர்டு ஸ்கூல் எஸ். அழகர் அய்யங்கார் அவர்கள் முயர்ச்சியினாலும், வர்ணாஸ்ரதர்ம வாலிபர் சங்கத்தாரின் ஒத்துழைப்பின் பேரிலும் பிரதிதினம் காலை உஞ்சிவிருத்தியுடன் இரவு பஜனை மிக ஆடம்பரமாக சுமார் 3-மணி வரையில் நடந்தேறியது.

16-உ செவ்வாய்கிழமை ஸ்ரீ ராம ஜெனனத்தன்று ஸ்ரீ ராம ஜெனனத்தை சாங்கோபாங்கமாய் படித்து அங்கு விஜயம் செய்திருந்த பக்தர்கள் யாவருக்கும் தாம்பூலம், வரைதானம் பானக. நீர்மோர் வினியோகம் கொடுக்கப்பட்டது. மறுநாள் காலை சீதா கல்யாணத்தை மிகச்சிறப்பாக, போற்றத் தகுந்த முறையில் நடத்தி சுமார் 150 ஆஸ்திக பிராமண பக்கர்களுக்கு மேல் சந்தர்பணையும் நடந்தது. அன்றிரவு ஸ்ரீ ராமர், ஆஞ்னேயர் முதலிய படங்களுடன் கிராம பிரதக்ஷணம் வந்து இரவு சுமார் 4½-மணியுடன் பஜனை மிகச் சிறப்பாகவும், ஆடம்பரமாகவும் முடிவுற்றது.

இப்பஜனோத்ஸவத்தில் பல ஆஸ்திக வாலிபர்கள் பக்தர்களின் வேடங்களை பிரதிதினமும் தரித்து நடித்து காண்பித்தது போற்றத்தகுந்தது. மேலும் காரைக்குடி, ஓ. சிறுவயல் முதலிய ஊர்களிலிருந்து பல ஆஸ்திக பக்த பாகவதர்கள் விஜயம் செய்து மிகசிறப்பாக பஜனையை நடத்தி வைத்தது குறிப்பிடத் தகுந்தது.

ஓ. கி.

ஆத்தன்குடி.

ஸ்ரீராம நவமி வைபவம்

16-4-40உ செவ்வாய்க்கிழமை பகல் 11-மணிக்கு ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீமத் வால்மீக ராமாயணத்தில் ஸ்ரீராம ஜனன கட்டத்தை வாசித்து இனிமையாக விளக்கினார்கள். கற்பூரஹாலாத்திக்குப் பின் விரைதானம் செய்யப் பெற்றது. இரவு 10-மணிக்கு பக்கவாத்தியங் களுடன் பஜனை நடந்தது. பல பக்தர்கள் இனிமையாகவும் உருக்கமாகவும் பக்திரஸம் ததும்பும் தேவாரம் திருப்புகழ் கீர்த்தனைகள் பாடினர். ஸ்ரீ ஜகதீசய்யரவர்களால் வந்தனோபசாரம் கூறப் பெற்று பிரசாதங்கள் வழங்கியபின் இரவு 3-மணிக்கு வைபவம் இனிது நிறைவெய்தியது.

ந. நி.

ஸ்ரீராம நவமி உத்ஸவம்.

சென்னை ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்ரீ நவமியன்று மாலை வழக்கமாக நடக்கும் மஹாஸ்காந்தத்தை நிறுத்தி ஸ்ரீ ராமாவதாரம் பிரும்மஸ்ரீ ஸ்ரீ வத்ஸ, ஸோமதேவ சர்மா அவர்களால் ஸ்ரீ ராமாயணம் மாத்ரமேயின்றி பாத்மம். நாரதம் கர்க்கஸம்ஹிதை முதலியவைகளில் கூறியபடி மிக உருக்கமாகவும் ரஸமாகவும் உபன்யஸிக்கப்பட்டது. பலர் விரைதானம் செய்தனர். விநியோகமான பிறகு ஸபை இனிது கலைந்தது. (ஓ. நி.)

மதப்ரசார அறிக்கை.

சென்னை அமரகலாவிலாஸினீ ஸபை தலைவர் 24—4—40 முதல் 15—6—40 வரை தென்னாட்டில் மதப்ராசாரார்த்தம். சுற்றுப்ரயாணம் செய்யும்படி ஸபாதீர்மானித்திருக்கிறது. அந்தந்த ஊரிலுள்ள ஆஸ்திகர்களனைவரும் ஸபை கூட்டி உபன்யாஸகரை வரவேற்று (மூன்றாவது வகுப்பு ரயில் சார்ஜ் கொடுத்து) தர்மப்ரசார்ரம் செய்யும்படி வேண்டுகிறோம். அடியிற்கண்ட விலாஸத்திற்கு கடிதம் எழுதவும்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.
c/o, ரூபி. கே. பட்டாபிராம
சாஸ்திரிகள்.
D. E. ஆபீஸ்
கடலூர்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.